
# திராவிடத்தால் வாழ்கிறோம்

785

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

# உடன்பிறப்பே...

**நீரை.மகேந்திரன்**

102

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த நெல்லை குமார.சுப்பிரமணியம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**




## நெல்லை குமார.சுப்பிரமணியம்

# ‘வெண்பா நண்பர்!’

*1961*-ஆம் ஆண்டு, தொடக்கத்தில் கழகத்தில் உள்கட்சிப் புயல் தீவிரமாக இருந்த நேரம், பிப்ரவரி 26-ஆம் தேதி ஈ.வெ.கி. சம்பத்தின் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துவதற்கு, அண்ணா பெருமுயற்சி எடுத்திருந்தார். அப்படியான சூழலில், அண்ணா பெரும் மனச்சோர்வில் இருந்தாலும், அதற்கு அடுத்து இரண்டு நாட்களில் நாகர்கோவிலுக்கு அருகில் தக்கலையில் ஒப்புக்கொண்ட பொதுக் கூட்டத்துக்குப் புறப்பட்டுச் சென்றார்.

மதுரையில் இருந்து காரில் வந்த அவரை, கோவில்பட்டியில் கழகக் கொடி காட்டி நிறுத்துகிறார் நகரச் செயலாளர் தமிழரசன். அவருடன் நின்றிருந்த ஏழெட்டுபேரில், அப்போது கழகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்த, மின்வாரியத்தில் பணிபுரிந்த 22 வயது இளைஞரும் இருந்தார். அண்ணா யாரிடமும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. சோர்வில் இருந்தார். அந்த இளைஞர் “அண்ணா தேநீர் குடிக்கிறீர்களா ?” என அந்த நேரத்துக்கு ஏற்ற கேள்வியைக் கேட்கிறார். அந்த இளைஞர் வாங்கி வந்த தேநீரைக் குடித்துக்கொண்டே, “ஒன்றும் கவலைப்பட வேண்டாம், சரி பண்ணிவிடலாம்” என அண்ணாவிடமிருந்து பதில் வருகிறது. அன்று அண்ணாவை இயல்பாக்கிய அந்த இளைஞர்தான், நெல்லையில் கடந்த மாதம் 28-ஆம் தேதி மறைந்த கழக முன்னோடி குமார.சுப்பிரமணியம்.

அன்றைய நெல்லை மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தில், சத்திரங்கொண்டான் என்கிற கிராமத்தில் 1938-ஆம் ஆண்டு பிறந்தவர் சுப்பிரமணியம். பெற்றோர் குமாரசாமி-மந்திரத்தம்மாள். முக்கூடலில் நடுநிலைப்பள்ளிவரை பயின்ற இவரை, இவரது பெற்றோர் உயர்நிலைக் கல்விக்கு மன்னார்குடி போர்டு பள்ளியில் சேர்த்தனர். அந்தப் பள்ளியில் அவரை சேர்ப்பதற்கு, பரிந்துரைக் கடிதம் அளித்தவர் அன்றைய நாளில் ‘காட்டூர் ராமையா’ என அறியப்பட்ட இனமானப் பேராசிரியர் அவர்கள்.

சுப்பிரமணியம் மன்னார்குடியில் தங்கியிருந்த விடுதிக்கு அருகில்தான், கழகத்தின் அலுவலகம் இருந்தது. அங்கு அடிக்கடி வரும் கலைஞருக்கு ஆர்வ மிகுதியில் வணக்கம் வைக்கும் சிறுவனாகத் தன்னை வளர்த்துக் கொண்டதுடன், பிற்பாடு அவரது ‘வெண்பா’ நூலுக்கு கலைஞரிடம் அணிந்துரை வாங்கி வெளியிட்டிருக்கிறார். நெல்லை கா.மு.கதிரவனிடம், **‘வெண்பா நண்பர்’** என்று கலைஞர் குறிப்பிட்டதைத் தனது நூலில் பதிவு செய்கிறார் சுப்பிரமணியம்.

### மின் இலாகா தினக்கூலி

உயர்நிலைக் கல்விக்குப் பின், நெல்லை சென்ற சுப்பிரமணியம், அதற்கு அடுத்த ஆண்டே அப்போதைய மின்சார இலாகாவில், மின் கம்பங்கள் நடும் தினக்கூலியாகப் பணிக்குச் சேர்ந்தார். 1957-ஆம் ஆண்டு தொடக்கத்தில் பணி நிரந்தரம் செய்யப்பட்டு படிப்படியாக கம்பியாளர், மின் பாதையாளர், மின்பாதை ஆய்வாளர், முகவர் வரை வளர்ந்தார், அதேநேரத்தில் கழக ஈடுபாட்டிலும் எந்த சமரசமும் செய்து கொள்ளாத களப்பணியாளராக இருந்தார்.

1957-ஆம் ஆண்டு பிற்பகுதியில், கழகத்தில் உறுப்பினர் சேர்க்கை அறிவிப்பை அடுத்து, தனது 19 வயதில் கழக உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார். அப்போது தொடங்கி, 67 ஆண்டு காலம் கழகத்தின் கொள்கை வீரராகத் திகழ்ந்தவர். 1977-ஆம் ஆண்டு அன்றைய பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தில் மாவட்டக் கழகப் பிரதிநிதியாக இருந்தார்.

### பெரியார் தந்த அறிவுரை

1958-ஆம் ஆண்டில், டிசம்பர் மாதத்தில் சாத்தான்குளத்தில் தந்தை பெரியாரை சந்தித்ததை, **‘எனது நினைவலைகள்’** என்ற தன் நூலில் பதிவு செய்துள்ளார். அதில், தனது துணைவியார், தனக்குத் தெரியாமல் கோயிலுக்குச் சென்று வருகிறார் என்பது அறிந்து அடித்து விட்டேன்’ என அன்றைய இளைஞர்களிடம் இயல்பாக இருந்த உணர்ச்சியைப் பெரியாரிடம் கூறி இருக்கிறார். அதற்கு கோபப்பட்ட பெரியார் “உனக்கு அறிவு வந்துவிட்டது; அவர்களுக்கு வரவில்லை. அதற்காக அடிப்பதா? அது பெரிய தவறு” எனக் குறிப்பிட்டு, “அவர்களுக்கு அறிவு வரும் வரை, நீங்கள் வேலை செய்ய வேண்டும்” என்று கூறிய ஆலோசனைதான், என்னை இறுதி வரை இயக்கியது என அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார் குமார.சுப்பிரமணியம்.

திராவிட இயக்க இதழ்களில் தீவிரமாக எழுதி வந்த, சுப்பிரமணியம், தனது இறுதிக் காலத்தில் நெல்லை மத்திய மாவட்ட இலக்கிய அணித் தலைவராக இருந்தார். அதற்கு முன்னர் 10 ஆண்டு காலம் நெல்லை மாவட்ட இலக்கிய அணிப் புரவலராக இருந்தார். 1977 - 1989 வரை அன்றைய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டப் பகுத்தறிவாளர் கழகத் துணைச் செயலாளர் என வீச்சாக வேலை செய்தவர்.

### சிறையும் தொழிற்சங்கமும்

அரசுப் பணியாளர்கள், கலைத்துறையினர் நேரடியாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைவிட, தத்தமது துறைகளில் அரசியல் நோக்கத்துடன் வேலை செய்ய வேண்டும் என்பார், பேரறிஞர் அண்ணா. அதற்கேற்ப தென்மாவட்டங்களில் மின் தொழிலாளர்கள் மத்தியில் கழக உணர்வை ஊட்டியவர்களில் குறிப்பிடத்தக்கவர் சுப்பிரமணியம். 1967-ஆம் ஆண்டில் தமிழக மின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தினை தோற்றுவித்தவர்களுள் ஒருவர். அந்தச் சங்கத்தின் மாநில இணைச் செயலாளர், வட்டாரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளில் இருந்தவர். அவரது இறுதிக்காலம் வரை அந்தச் சங்கத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினராக இருந்தவர்.

தொ.மு.ச பேரவையின் செயல்பாடுகளிலும் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டவர். திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதியுள்ள ‘தொ.மு.ச. பேரவையின் வரலாறு’ நூலில், ‘மதுரை, திருநெல்வேலி, ராமநாதபுரம், குமரி மாவட்டங்களில் மின் கழக தொ.மு. சங்கங்களை நிறுவி, செயல்படுத்தி வந்தவர் குமார.சுப்பிரமணியம்’ எனப் பதிவு செய்துள்ளார்.

கழகத்தினர் அரசுப் பணியாளர்களாக இருந்தாலும், போராட்டம், கைது என எதற்கும் தயாராக இருப்பார்கள். அதுபோல 1959-ஆம் ஆண்டு, கன்னியாகுமரி வருகை தந்த அன்றைய குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத்துக்கு கருப்புக் கொடி காட்டும் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அப்போது முன்னெச்சரிக்கையாக அரசுப் பணியாளரான சுப்பிரமணியமும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அ.தி.மு.க. ஆட்சிக் காலங்களில் அவர் பலமுறை சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

### இளைஞர்களுக்கு ஊக்கம்

தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டிருந்த குமார.சுப்பிரமணியம், இளைஞர்களுக்கு திராவிட இயக்க அரசியல் பயிற்றுவிப்பது, கழக வரலாற்றினைப் பதிவு செய்வது போன்ற பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இறுதிக் காலத்தில் உடல் நலிவுற்ற நிலையிலும் மாவட்ட கழகக் கூட்டங்கள், கொடியேற்ற நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கெடுத்து, தனது கழகப் பற்றினை இளைஞர்களுக்கு எடுத்துக் காட்டியவர். ‘மருத்துவ ஓய்வில் இருந்தவர், கழகத்தின் இளைஞரணி நடத்திய ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப்போட்டி நிகழ்ச்சிக்குப் பார்வையாளராக வருகை தந்து, அடுத்த தலைமுறையின் அரசியல் பற்றுக்கு ஊக்கமளித்தவர்’ என நெல்லை மாவட்டக் கழகத்தினர் நினைவுகூர்கின்றனர்.

1961 ஆம் ஆண்டில் ‘தென்றல்’ இதழில் எழுதத் தொடங்கி, ‘முரசொலி’, ‘திராவிடன்’ எனப் பல ஏடுகளில் எழுதிவந்தவர், தனது இறுதிக்காலத்தில் சமூக ஊடகங்களில் வீடியோ வழியாகவும், கழகத்தின் வரலாற்றினை இளைஞர்களுக்குக் கடத்தினார்.

2025-ஆம் ஆண்டு தொடக்கத்தில் உடல்நலன் குன்றிய அவர், பிப்ரவரி 28-ஆம் தேதி, தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். “மின் கழக தொ.மு.ச. பேரவையின் முன்னோடி, தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர்களில் ஒருவர், திராவிட இயக்கத்தின் கொள்கைகளைக் கவிதை வடிவில் கொண்டு சென்ற பேராற்றல் படைத்தவர் என கழகத்தலைவர் தனது இரங்கலில் பெருமைப்படுத்தியிருந்தார். 87 வயதில் இளைஞராக கழகப் பற்றுக்கு சான்றாக நின்ற குமார.சுப்பிரமணியம் அவர்கள் நெல்லை கழகத்தில் என்றென்றைக்கும் நினைவில் நிற்பார்.

...துடிக்கும்

## பெரியார்
## ஏன் எதிரிகளைப் பதறவைக்கிறார்?




இந்தியத் துணைக்கண்டத்தில் வேறெந்த மாநிலத்திற்கும் இல்லாத ஒரு விழிப்புணர்வு தமிழ்நாட்டுக்கு மட்டும் இருக்கிறது. இந்தியை எப்படித் திணித்தாலும், ஏற்க மறுத்து எதிர்த்து நிற்கிறது. குலக்கல்வியை எப்படிப் புகுத்தினாலும், எதிர்த்து நிற்கிறது. ‘ஜி.எஸ்.டி.’, ‘மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்பு’, ‘நிதிப்பகிர்வில் ஓரவஞ்சனை’ என மாநில உரிமைகள் சார்ந்த சிக்கல் எதுவென்றாலும், மற்ற மாநிலங்களுக்கும் சேர்த்து, தமிழ்நாடு புரிய வைக்கிறது, அவர்களையும் எதிர்த்துப் போராடத் தூண்டுகிறது. இந்த தன்மான உணர்வைத் தமிழ்நாட்டுக்குத் தந்தவர் தந்தை பெரியார்.

தமிழர் மனங்களில் இருந்து பெரியாரை அகற்றிவிட்டால், தமிழ்நாட்டின் தனித்துவப் பண்பைச் சிதைத்துவிடலாம் என்று கொள்கைப் பகைவர்கள் அரை நூற்றாண்டாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது முடியவில்லை என்பதால், இப்போது வேறு சிலரை ஏவி விட்டிருக்கிறார்கள். கோட்பாடாய், கொள்கையாய் அவர்களையும் சேர்த்து, அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார் பெரியார்.

மறைந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகியும், பெரியார் ஏன் இவர்களைப் பதற வைக்கிறார்? இந்தக் கேள்வியை மையமாக வைத்து, 500 இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் மூலம் பெரியாரின் பணிகளை விளக்கிப் பரப்புரை செய்த திராவிடர் விடுதலைக் கழகம், இன்று மயிலாடுதுறையில் நிறைவு மாநாட்டை நடத்துகிறது. அதன் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், மாலை 4 மணிக்கு சின்னக்கடை வீதியில் நடைபெறும் மாநாட்டில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘தமிழ் மண் தன்னுரிமை இயக்க’த்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்டோர் கருத்துரை ஆற்றவுள்ளனர்.

‘கோவன் குழு’வினரின் கலைநிகழ்ச்சியும், துரை தாமோதரனின் ‘மந்திரமல்ல தந்திரமே’ அறிவியல் விளக்க நிகழ்ச்சியும் மாநாட்டில் நடைபெறுகிறது.

வாய்ப்புள்ளோர் செல்க...

## ஃப்ளாஷ்பேக்





எஸ்.வி.எஸ்.சாகுல் அமீது

### `அன்னையின் மடியில் நான்’

எனது தந்தை எஸ்.வி.சக்கரை மைதீன், அம்மா ஆமீனம்மாள் இருவரும் மத மறுப்புத் திருமணம் செய்தவர்கள் என்பதுடன், திராவிடர் கழகத்திலும் ஈடுபாடு கொண்டவர்கள். தந்தை பெரியாரும் அன்னை மணியம்மையாரும் தாராபுரம் வழியாகச் செல்லும்போது, எங்கள் வீட்டில் ஓய்வு எடுத்துச் செல்வது வழக்கம். எங்கள் வீட்டு இட்லி, கோழிக் குழம்பு போன்ற உணவுகள் மீது அய்யாவுக்கும் அன்னைக்கும் எப்போதும் பிரியம் உண்டு. அப்படி ஒரு சமயம் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்தபோது அன்னை மணியம்மையார், என்னை மடியில் அமர்த்திக் கொண்ட படம் இது. ஒவ்வொரு ஆண்டும் அவரது நினைவு நாளின்போது என்னைத் திரும்பிப் பார்க்கவைக்கும் படம் இது.

**– எஸ்.வி.எஸ்.சாகுல் அமீது,**
**மாவட்ட தி.மு.க. தொண்டர் அணித் தலைவர், திருப்பூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வகுப்புவாரி ஒதுக்கீடு ஆணை!

1947-ஆம் ஆண்டில் ஓமந்தூர் ராமசாமியார் சென்னை மாகாண பிரீமியராக இருந்தபோது, அரசுப் பணிகளுக்கு வகுப்புவாரி இட ஒதுக்கீட்டினைத் தொடங்கி வைத்தார். இந்தியக் குடியரசில் புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, ‘சென்னை மாகாணத்தின் வகுப்புரிமை ஆணை செல்லாது’ என சென்னை உயர்நீதி மன்றமும், 1950-இல் உச்சநீதிமன்றமும் தீர்ப்பளித்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131